# கிறிஸ்தவம் தேவையா?

## நம் வாழ்வின் இன்றியமையாத கேள்விக்கான பதில்

RAY COMFORT

© 2007 by Ray Comfort. All rights reserved.
ISBN 978-0-88270-426-5
Cover & layout: www.genesis-group.net
Printed in the United States of America

## தேர்ந்தெடுத்தல்

நான் உங்களுக்கு முன்னால் நான்கு விதமான பரிசுகளை வைக்கிறேன் என்று கற்பனை செய்து கொள்ளுங்கள்:

- ஒரு கிலோ தங்கம்
- ஒரு புத்தம் புது மெர்சிடிஸ் பென்ஸ் கார்
- ஒரு கோடி ரூபாய்
- ஒரு பாராசூட் (உயரத்திலிருந்து குதிக்கும்போது நம்மைப் பாதுகாக்கின்ற கருவி)

மனிதர்கள் மிகவும் விரும்புகிற பொருட்கள் இதில் உண்டு. இந்த நான்கில் ஒன்றை நீங்கள் பரிசாக எடுத்துக்கொள்ளலாம்? எதை எடுக்கலாம் என்று சிந்திக்கிறீர்களா? முடிவு செய்வதற்கு முன்னால், ஒரு முக்கியமான தகவல்: 10,000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருக்கிற ஒரு விமானத்தின் வாயிலில் நீங்கள் நின்று கொண்டிருக்கிறீர்கள். அந்த விமானம் இன்னும் சிறிது நேரத்தில் வெடித்துச் சிதறப்போகிறது. உங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு, அந்த விமானத்திலிருந்து நீங்கள் இப்பொழுது கீழே குதிக்க வேண்டும்.

எந்தப் பரிசை எடுக்கலாம் என்று முடிவு செய்ய இந்த தகவல் உதவியதா? நிச்சயம் உதவியிருக்க வேண்டும். நீங்கள் நின்று கொண்டிருக்கிற நிலைமையில் உங்களுக்கு பயன்படக்கூடியது ஒரே ஒரு பொருள்தான். அது நான்காவதாக இருக்கின்ற பாராசூட். மற்ற எல்லாமே மிக மதிப்புள்ளவைகள்தான், ஆனால் 10,000 அடி உயரத்திலிருந்து குதிக்கும்போது புவியீர்ப்பு சக்தியை சமாளிப்பதற்கு அவைகளெல்லாம் எந்தவிதத்திலும் உதவாது. அவ்வளவு உயரத்திலிருந்து குதிக்க வேண்டிய அவசியம் வரும்போது, அது உங்கள் மனதில் ஒரு பயத்தை ஏற்படுத்தும். இது ஒரு ஆரோக்கியமான பயம். எப்படி இதை ஆரோக்கியமான பயம் என்று சொல்லலாம்? எப்படியென்றால், அந்த பயம் உங்களை சரியான முடிவை எடுக்க வைத்து, உங்கள் உயிரை காப்பாற்றக்கூடியது. இதை உங்கள் நினைவில் வைத்துக்கொண்டு தயவுசெய்து தொடர்ந்து வாசியுங்கள்.

இப்பொழுது இந்த உலகத்தில் உள்ள நான்கு முக்கிய மதங்களை உங்கள் முன்னால் வைக்கிறேன்:

- இந்து மதம்
- புத்த மதம்
- இஸ்லாம்
- கிறிஸ்தவம்

இந்த நான்கில் எந்த மதத்தை நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள்? எதை தேர்ந்தெடுப்பது என்று முடிவு செய்வதற்கு முன்னால், ஒரு முக்கிய தகவல்: மனித இனம் முழுமையும் ஒரு கட்டாயத்தில் நின்று கொண்டிருக்கிறது. நாம் எல்லோரும் ஒரு நாள் மரண வாயிலை கடந்து செல்ல வேண்டும். அந்த சம்பவம் ஒருவேளை இருபது வருடங்கள் கழித்து நடக்கலாம், அல்லது ஆறு மாதங்கள் கழித்து... அல்லது இன்றைக்கே கூட நடக்கலாம். பெரும்பான்மையான மனித இனத்திற்கு மரணம் என்பது இதுவரை கண்டிராத ஒரு பயங்கரமான பள்ளத்திற்குள் விழுப்போகின்ற ஒரு அனுபவம். இந்த சூழ்நிலையில் நீங்கள் எந்த மதத்தை தேர்ந்தெடுப்பீர்கள்?

புவியீர்ப்பு சக்தி என்பது ஒரு இயற்கையின் நியதி. இந்த நியதியைக் குறித்து உங்களுக்கு இருக்கின்ற ஞானம்தான், பத்தாயிரம் அடி உயரத்திலிருந்து கீழே குதிக்க வேண்டிய நிலைமை வந்தபோது உங்களுக்கு பயத்தை ஏற்படுத்தியது. அந்த பயம்தான் உங்களை ஒரு புத்திசாலித்தனமான முடிவை எடுக்க வைத்தது. இதேபோல இப்பொழுது வேறொரு நியதியைக் குறித்து பார்க்கப்போகிறோம். அந்த நியதி உங்களை என்ன செய்யும் என்று நீங்கள் அறிந்து கொள்ளும்போது, மீண்டும் ஒரு பயம் வரும். அந்த பயம், மற்றுமொரு புத்திசாலித்தனமான முடிவை நீங்கள் எடுப்பதற்கு நிச்சயம் உதவும்.

## எடை போடப்படுதல்

நாம் ஒவ்வொருவரும் மரணமடைந்ததற்குப் பிறகு நீதிபதியாகிய தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்னே நிற்க வேண்டும். அந்த நாளைத்தான் நியாயத்தீர்ப்பு நாள் (Judgement Day) என்று சொல்கிறோம். அவருடைய சட்டப்புத்தகத்தில் “பாவம் மரணம்” [1] என்கிற ஒரு சட்டம் உண்டு. அந்த சட்டத்திற்கு மற்றுமொரு பெயர் “பத்துக் கட்டளைகள்” . அந்த கட்டளைகளின் படி அவர் நமக்கு நியாயத் தீர்ப்பை வழங்குவார். அந்த நாளை நீங்கள் எப்படி சந்திக்கப் போகின்றீர்கள் என்று பார்க்கலாம்.

உலகத்திலிருக்கிற மற்ற எல்லா மனிதர்களையும், பொருட்களையும் விட கடவுளை உங்கள் வாழ்வில் முதன்மையாக வைத்தீர்களா? அதைத்தான் முதலாவது கட்டளை செய்யச்சொல்கிறது. ஏனென்றால் அவர்தான் உங்களுக்கு உயிர் கொடுத்து உங்களுக்கு வேண்டிய எல்லாவற்றையும் தந்திருக்கிறார். மற்ற எல்லாவற்றையும் விட கடவுளை முதன்மையாக வைக்கவில்லை என்னும்போது நீங்கள் முதலாவது கட்டளையை மீறியிருக்கிறீர்கள்.

அல்லது உங்களுக்கென ஒரு சொந்த தெய்வத்தை உருவாக்கிக் கொண்டீர்களா? அப்படியென்றால், இரண்டாவது கட்டளையை உடைத்திருக்கிறீர்கள். மனிதன் தன்னுடைய கற்பனைக்கு தகுந்தபடியான ஒரு தெய்வத்தை உருவாக்கிக் கொள்வதன் பெயர்தான் “விக்கிரக ஆராதனை” என்பது. விக்கிரக ஆராதனை செய்பவர்கள் சொர்க்கத்திற்குள் போக முடியாது.

கடவுளின் பெயரை வீணாக உபயோகித்திருக்கிறீர்களா? அவர் பெயரை வீணாக உபயோகிப்பது அவருக்கு கொஞ்சம்கூட பிரியமில்லாத காரியம். அப்படி செய்திருந்தால் மூன்றாவது கட்டளையை மீறியிருக்கிறீர்கள், அந்த குற்றத்தை செய்பவர்களை தேவன் மன்னிக்க மாட்டார் என்று வேதம் சொல்கிறது.

எல்லா நேரத்திலும் உங்களுடைய பெற்றோர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை நீங்கள் முழுமனதோடு செய்திருக்கிறீர்களா? ஓய்வு நாளை நீங்கள் கடவுளுக்கென செலவு

செய்திருக்கிறீர்களா? இல்லையென்றால் நான்காவதும் ஐந்தாவதும் கட்டளைகளை மீறியிருக்கிறீர்கள். அல்லது யாரையாவது உங்கள் மனதில் வெறுத்திருக்கிறீர்களா? "தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்" [2] என்று வேதம் சொல்கிறது.

ஏழாவது கட்டளை "விபச்சாரம் செய்யாதீர்கள்" என்று சொல்கிறது. தகாத முறையில் பாலியல் உறவு வைத்துக்கொள்வது மாத்திரம்தான் விபச்சாரம் என்று நினைத்துக்கொண்டு நான் விபச்சாரம் செய்ததில்லை என்று சொல்கிறீர்களா? தகாத உறவு மாத்திரமல்ல, ஒரு ஆண் ஒரு பெண்ணை இச்சையோடு பார்த்திருந்தால் அதுவும் விபச்சாரம். ஒரு பெண் ஒரு ஆணை இச்சையோடு பார்த்திருந்தால் அதுவும் விபச்சாரம். இயேசு கிறிஸ்து சொல்கிறார் "ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று" [3] என்று.

எப்பொழுதாவது நீங்கள் பொய் சொல்லியதுண்டா? எதையாவது திருடியிருக்கிறீர்களா? சாதாரண, விலைக்குறைவான பொருளாக இருந்தாலும், அதுவும் திருட்டுதான். அவர் சத்தியமும் பரிசுத்தமும் உள்ள தேவனாக இருப்பதால் "பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்" [4] என்று வேதம் சொல்கிறது. மற்றவர்களுடைய பொருட்களை அடைய வேண்டுமென்று ஆசைப்பட்டதுண்டா? இது பத்தாவது கட்டளையை மீறுவதாகும்.

## ஜெஸிகா என்கிற சிறுமி

இதுதான் நாம் அனைவரும் சந்திக்க வேண்டிய கடவுளின் சட்டங்கள். எனக்கு ஒன்றும் தெரியாது என்று அன்றைய தினம் தப்பிக்க முடியாது, ஏனென்றால் நன்மை எது தீமை எது என்று அறிந்து கொள்கிற மனச்சாட்சியையும் கடவுள் நமக்குத் தந்திருக்கிறார். ஒவ்வொரு முறையும் பொய் சொல்லும்போதும், திருடும்போதும், காம இச்சையால் தவறு செய்யும்போதும், கொலை செய்தாலும், மற்ற தவறான வழியில் போகும்போதும், அவைகள் பாவங்கள் என்பது நமக்கு நன்றாக தெரியும்.

இப்பொழுது ஒரு மிக முக்கியமான கேள்வி உங்களுக்கு முன் வருகிறது: நியாயத்தீர்ப்பு நாளன்று கடவுளின் முன்னால் நீங்கள் நிற்கும்போது குற்றமில்லாதவர் என்கிற தீர்ப்பை பெறுவீர்களா அல்லது குற்றம் செய்தவர் என்கிற தீர்ப்பை பெறுவீர்களா? நீங்கள் சொர்க்கத்திற்குப் போவீர்களா, அல்லது நரகத்திற்குப் போவீர்களா? பதில் சொல்வதற்கு முன்னால் சிந்தித்துப் பாருங்கள். கொலைபாதகரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யரும், திருடரும், விபசாரம் செய்பவர்களும் சொர்க்கம் என்று சொல்லப்படுகிற பரலோகத்திற்குள் நுழைய முடியாது [5] என்று வேதம் சொல்கிறது. அப்படியென்றால் நீங்கள் எங்கே போவீர்கள்?

ஒருவேளை நரகம் என்கிற இடத்தின்மேல் நம்பிக்கை இல்லாததால், அங்கே போவதைப் பற்றி நீங்கள் பயப்படாமல் இருக்கலாம். அப்படி பயப்படாமல் இருந்தால், பத்தாயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருக்கிற விமானத்தின் வாயிலில் நின்று கொண்டு, பாராசூட் இல்லாமலேயே குதிப்பேன், எனக்கு அசம்பாவிதம் ஒன்றும் நடக்காது என்று சொல்வது போல இருக்கும்.

கடவுளின் கட்டளைகளை மீறுவதால் ஒரு பிரச்சினையும் இல்லை என்று சொன்னால், தேவன் என்பவர் நியாயம், நீதி இல்லாதவர் என்று அர்த்தம். ஏன் தெரியுமா?

அமெரிக்காவில் ஃப்ளோரிடாவிலுள்ள ஹோமோசசா என்கிற ஊரிலிருந்து ஜெஸிகா என்கிற ஒன்பது வயது பெண், 2005ம் ஆண்டு பிப்ரவரி 24-ம் தேதி காணாமல் போய்விட்டாள். மூன்று

வாரங்களுக்குப் பிறகு, மண்ணுக்கு அடியில் புதைக்கப்பட்டிருந்த அவளுடைய உடலை போலீஸார் கண்டு பிடித்தனர். அந்த சிறுமி கடத்தப்பட்டு, கொடூரமாக கற்பழிக்கப்பட்டு, உயிரோடு புதைக்கபட்ட உண்மை பரிசோதனையில் தெரிய வந்தது.

## இது உங்கள் மனதில் என்ன பாதிப்பை ஏற்படுத்துகிறது?

அவ்வளவு சிறிய ஜெஸிகாவுக்கு இவ்வளவு பெரிய கொடூரத்தை செய்த அந்த மனிதனைக் குறித்து உங்கள் மனதில் என்ன தோன்றுகிறது? கோபம் வருகிறதா? வரும். கோபம் வர வேண்டும் என்று நினைக்கிறேன். ஒருவேளை இதைக் கேட்டு உங்கள் மனதில் ஒரு பாதிப்பும் ஏற்படவில்லை என்றால், அது உங்களுடைய மிக மோசமான இருதயத்தை வெளிப்படுத்துகின்றது.

இப்படிப்பட்ட கொடூரத்தையெல்லாம் சாதாரணமாக விட்டுவிடுவாரா அந்த தெய்வம்? விட மாட்டார் என்று உங்களால் சொல்ல முடியும். ஆம், அவர் இது போன்ற பாவங்களினால் மிகவும் ஆத்திரமடைகிறவர்.

பாவங்களைக் கண்டு தேவன் ஆத்திரமடைவது, அவர் நல்லவர் என்பதற்கு ஒரு அடையாளம். அவருக்கு கோபம் வரவில்லையென்றால் அவர் நல்லவர் இல்லை. அவரையும் அவருடைய கோபத்தையும் நாம் பிரிக்க முடியாது. மீண்டும் சொல்கிறேன், கடவுள் நல்லவராக இருக்கும் பட்சத்தில், அவர் பாவத்தை காணும்போது மிகவும் ஆத்திரமடைவார்.

அதே சமயத்தில் கற்பழிப்பு, கொலை இவைகளால் மாத்திரம்தான் அவர் கோபமடைவார் என்று சொல்லும் அளவுக்கு, அவருடைய நீதியும், நற்குணமும் குறுகியவை அல்ல. அவருடைய பரிசுத்தமான கண்களிலிருந்து எதுவும் மறைக்கப்பட முடியாது. கொடுமை, பயங்கரவாதம், திருட்டு, பொய், விபச்சாரம், ஓரினச் சேர்க்கை, கடவுளின் பெயரை வீணாக பயன்படுத்துதல் போன்று எல்லாமே அவரை மிகவும் கோபமடையச் செய்கின்ற காரியங்கள். அவர் நாம் செய்வதை மாத்திரம் அல்ல, நாம் சிந்திக்கின்றவற்றையும் பார்க்கின்றார், அதற்காகவும் அவர் நம்மை விசாரிப்பார். நம்முடைய பேச்சுக்கள் எப்படி இருக்கின்றன என்பதையும் அவர் கவனிக்கின்றார். இயேசு சொல்கிறார்: “மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும்” [6]. மனதிற்குள் நாம் கொள்கிற காம இச்சைகள், விரோதம், பேராசை, நன்றியில்லாமை, சுயநலம், பொறாமை, பெருமை, வஞ்சகம், எல்லாமும் அவருக்கு பிரியமில்லாதவைகள்.

தேவனுடைய கோபம் நம்மேல் நிற்கிறது [7] என்றும் ஒவ்வொரு முறையும் நாம் பாவம் செய்யும்போதும்: அவருக்கு நம்மேல் இருக்கிற கோபத்தை நாம் அதிகரித்துக்கொண்டே போகிறோம் [8] என்றும் வேதம் சொல்கிறது. அது மாத்திரமல்ல, பாவம் செய்கிற குணம் நம்முடைய சுபாவத்திலேயே இருப்பதால், நாம் இயற்கையாகவே தேவனுடைய கோபத்திற்கு ஆளானவர்கள் [9] என்றும் வேதத்திலிருந்து தெரிந்து கொள்ள முடியும்.

## உடனடி மரணம்

பெரும்பாலான மனிதர்களுக்கு ஒரு நம்பிக்கை உண்டு. தேவன் நல்லவராக இருப்பதால், எல்லோருடைய பாவங்களையும் மன்னித்து, எல்லா பாவிகளையும் பரலோகத்திற்குள் அனுமதிப்பார் என்பதுதான் அந்த நம்பிக்கை. ஆனால் அவர்கள் தேவனுடைய மகிமையை தவறாக புரிந்து கொள்கிறார்கள். மோசே என்கிற மனிதன் தேவனை காண வேண்டும் என்று

விரும்பியபோது, “நீ என் முகத்தைக் காணமாட்டாய், ஒரு மனிதனும் என்னைக் பார்த்ததற்குப் பிறகு உயிரோடிருக்க முடியாது” [10] என்று தேவன் சொல்கிறார். கடவுளை தன் கண்ணால் பார்த்திருந்தால் மோசே உடனடியாக மரணமடைந்திருப்பான். கர்த்தர் கீழேயுள்ள வசனத்தில் சொல்வதை வாசியுங்கள்:

*“என் மகிமை கடந்துபோகும்போது, நான் உன்னை அந்தக் கன்மலையின் வெடிப்பிலே வைத்து, நான் கடந்துபோகுமட்டும் என் கரத்தினால் உன்னை மூடுவேன்”.*

மோசே தேவனை தன் கண்ணால் பார்த்தவுடன் ஏன் மரணமடைய வேண்டும்? ஏனென்றால் தேவனுக்கு முன்னால் பாவமுள்ள எந்தப்பொருளும் உயிரோடு இருக்க முடியாது. மோசே ஒரு மனிதனான காரணத்தினால், அவனுக்குள் பாவம் இருந்தது, அதனால்தான் மோசே தன்னை பார்க்க முடியாதபடி மறைக்கிறார். ஒரு குவளைத் தண்ணீரை சூரியன்மேல் ஊற்றினால், தண்ணீர் என்ன ஆகுமோ அது போல் மோசேக்கு நடந்திருக்கும். தேவனுடைய மகிமையின் அனல் மோசேயை எரித்திருக்கும். கடவுளுக்கு முன்னால் மனிதர்களாகிய நம்மில் யாராவது நிற்க வேண்டும் என்றால், நம்மில் சுத்தமான இருதயம் வேண்டும். அதைத்தான் இயேசு இப்படியாக சொல்கிறார்: “இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்” [11]. ஆனால் நாம் மேலே பார்த்த அந்த பத்து கட்டளைகளின் அடிப்படையில் நம்மை எடை போட்டால், நம்மில் யாருமே சுத்த இருதயம் உள்ளவர்கள் அல்ல.

இது நம்மை மிகவும் கலங்கச் செய்கிற ஒரு சத்தியம். அவர் எப்படிப்பட்டவர் என்று பொதுவாக உலகத்திலுள்ளவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறபடியான ஒரு தேவன் இல்லை அவர். பாவங்கள் செய்து கொண்டிருப்பவர்களைப் பார்த்து கனிவாக சிரித்துக் கொண்டிருக்கின்ற கடவுள் இல்லை அவர்.

இந்த சத்தியத்தை தெரிந்து கொள்கிறபொழுது உங்கள் மனதில் ஏற்படுகின்ற பயம் ஒரு ஆரோக்கியமான பயம். உங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு அந்த பயம் உங்களுக்கு உதவட்டும். இந்த பயத்தைத்தான் வேதம் “ஞானத்தின் ஆரம்பம்” [12] என்று சொல்கிறது.

தேவனுடைய கட்டளைகளைக் குறித்து உங்களுக்கு கிடைத்திருக்கிற அறிவு, நீங்கள் எந்தவிதமான ஒரு ஆபத்தான சூழ்நிலையில் இருக்கிறீர்கள் என்பதை உணர்ந்து கொள்வதற்கு உதவக்கூடியது. உங்களுடைய பாவங்களுக்கு விரோதமாக தேவனுடைய நீதியுள்ள கடுங்கோபம் நின்று கொண்டிருக்கிறது. ஒரே ஒரு பாவம் செய்திருந்தாலும்கூட, அந்த பாவத்திற்கான தண்டனை, மரணமும் அதைத்தொடர்ந்து நரகமும்தான். ஆனால் நீங்கள் ஒரே ஒரு பாவம் மட்டுமல்ல, மாறாக என்னையும் மற்ற மனிதர்களையும்போல எல்லா கட்டளைகளையும், எண்ண முடியாத தடவை மீறியிருக்கிறீர்கள். தேவன் நீதியுள்ளவராக இருக்கும்போது, இப்படி ஆயிரக்கணக்கான முறை அவரது சட்டங்களை மீறுகின்ற ஒரு குற்றவாளி மேல், அவருக்கு இருக்கின்ற கோபம் எப்படிப்பட்டதாக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?

## பார்க்கலாம் வாருங்கள்

இப்படிப்பட்ட ஒரு பிரச்சினையில் மாட்டிக்கொண்டிருக்கிற உங்களுக்கு உலகத்தின் முக்கியமான நான்கு மதங்கள் ஏதாவது தீர்வை கொடுக்கின்றனவா என்று பார்க்கலாம்.

## இந்து மதம்

நீங்கள் கெட்டவராக இருந்தால், அடுத்த ஜென்மத்தில் எலியாகவோ அல்லது வேறு பிராணியாகவோ பிறப்பீர்கள் [13] என்றும், நல்லவராக இருந்தால், ஒரு இளவரசராக பிறப்பீர்கள் என்றும் இந்து மதம் சொல்கிறது. இந்த நம்பிக்கை எப்படி இருக்கிறது தெரியுமா? "நீங்கள் விமானத்திலிருந்து கீழே குதித்த பிறகு, மீண்டும் அதே விமானத்திற்குள்ளே இழுத்துக் கொள்ளப்படுவீர்கள்" என்பது போல. "நீங்கள் கெட்டவராக இருந்தால், மூன்றாம் வகுப்பில் போய் உட்காருவீர்கள். நல்லவராக இருந்தால், முதல் வகுப்பு சீட் கிடைக்கும்." இது கேட்பதற்கு மிகவும் சுவாரசியமான காரியம்தான். ஆனால் பாவம் செய்து தேவனுடைய கோபத்திற்கு ஆளாகி, நரகம் என்கிற ஒரு நிஜத்தை எதிர்கொள்ள வேண்டிய உங்களுக்கு இந்த நம்பிக்கை ஒரு விதத்திலும் உதவாது.

## புத்த மதம்

புத்த மதத்தின் வியப்புக்குரிய காரியம் என்னவென்றால், கடவுள் என்று ஒருவர் இருக்கிறார் என்பதையே அந்த மதம் மறுக்கிறது. வாழ்க்கை, மரணம் இந்த இரண்டுமே பிரம்மைகள் என்று இந்த மதம் போதிக்கிறது [14]. இந்த நம்பிக்கை எப்படிப்பட்டது தெரியுமா? "நான் ஒரு விமானத்தின் வாயிலில் நிற்கவில்லை, புவியீர்ப்பு சக்தி என்று ஒன்றும் கிடையாது, நான் இங்கே இருந்து குதித்தால் தரையில் விழமாட்டேன்" என்பது போல. இந்த நம்பிக்கை உங்களுடைய பயத்திலிருந்து தற்காலிகமான ஒரு விடுதலையை தரலாம், ஆனால் நிஜத்தை எதிர்கொள்வதற்கு நிச்சயம் உதவாது. முக்கியமாக தேவனுடைய கோபத்திற்கு ஆளாகி, நரகம் என்கிற ஒரு நிஜத்தை எதிர்கொள்ள வேண்டிய உங்களுக்கு இது ஒரு விதத்திலும் உதவாது.

## இஸ்லாம்

சொர்க்கம், நரகம் என்கிற இடங்கள் உண்டு என்பதையும், தேவன் நீதியுள்ளவர் என்பதையும் இஸ்லாமிய மதம் ஏற்றுக்கொள்வது அந்த மதத்தின் ஒரு சுவையான அம்சமாகும். ஆனால், நம்முடைய செயல்களின் மூலமாக நம்முடைய பாவங்களுக்குண்டான தண்டனையிலிருந்து நாம் தப்பிவிட வழியுண்டு, கடவுள் நம்முடைய கிரியைகளைப் பார்ப்பார், அப்பொழுது அவர் நம்மீது கருணை காட்டலாம், [15] என்பதுதான் அந்த மதம் தருகின்ற நம்பிக்கை. ஒவ்வொரு மனிதனுடைய செயல்களையும் நியாத்தீர்ப்பு நாளன்று எடை போட்டுப் பார்த்து, அவர்கள் இஸ்லாமை பின்பற்றினார்களா? மனம் வருந்தினார்களா? அவர்களுடைய பாவச்செல்களைவிட அதிகமாக நற்செயல்கள் செய்தார்களா? என்பதை அடிப்படையாக வைத்து அதன்படி யாரெல்லாம் சொர்க்கத்திற்கும், யாரெல்லாம் நரகத்திற்கும் போக வேண்டும் என்றும் முடிவு செய்யப்படும்.

ஆகையால், உங்களுடைய நற்செயல்கள் மூலமாக செய்த பாவங்களுக்கான தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்று இஸ்லாம் நம்புகிறது. இப்படி நம்புவதும், விமானத்திலிருந்து நான் குதித்து என்னுடைய கைகளை வேகமாக இறக்கைகளை போல் அடித்துப் பறப்பேன், அதன் மூலமாக புவியீர்ப்பு விசையோடு எதிர்த்துப் போராடி தரையில் விழாமல் சமாளித்துக்கொள்வேன் என்று நம்புவதும் ஒன்றுதான்.

அது மாத்திரம் அல்ல.

தேவனுடைய கட்டளைகள் நமக்கு காட்டுவது என்னவென்றால், நம்மிலே மிகவும் நல்லவன் என்று யாரை நினைக்கிறோமோ, அவன் கூட பரிசுத்தமான அந்த தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்னாலே ஒரு கேடுகெட்ட குற்றவாளியாக இருப்பான் என்பதுதான்.

இதை நாம் புரிந்து கொண்டதற்குப் பிறகு, நன்மைகள் செய்வதன் மூலமாக தண்டனையிலிருந்து தப்பலாம் என்று நினைத்தால், இந்த உலகத்தின் நீதிபதிக்கு லஞ்சம் கொடுப்பதற்கு முயற்சி செய்வது போல ஆகிவிடும். வேதம் சொல்கிறது: “நம்முடைய குற்றங்களின் அளவு அதிகமாக இருப்பதால், அதை மன்னிப்பதற்காக தேவனுக்கு நாமாக எதை செலுத்தினாலும், அது அருவருப்பான காரியமாக இருக்கும்,[16] அது நம்முடைய குற்றத்தை அதிகப்படுத்தும்” .

தேவனுடைய கோபத்திற்கு ஆளாகி, நரகம் என்கிற ஒரு நிஜத்தைக் குறித்து கலங்கிப்போயிருக்கிற உங்களுக்கு, மற்ற மதங்கள் எந்த விதத்திலும் உதவாதது போலவே இஸ்லாமும் உதவாது.

## கிறிஸ்தவம்

அப்படியென்றால் கிறிஸ்தவ மதம் எந்தவிதத்தில் வித்தியாசமானதாக இருக்கிறது? இதில் மட்டும் என்ன விசேஷம்? வித்தியாசமும் விசேஷமும் என்னவென்றால், கிறிஸ்தவ மதத்தில், தேவனே நமக்கு ஒரு பாராசூட்டை கொடுத்திருக்கிறார். பத்தாயிரம் அடி உயரத்திலிருந்து குதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்போது, ஒரு பாராசூட் உங்களுக்கு தேவைப்பட்டதுபோல, தேவனுடைய கட்டளைகளை மீறியதற்கான தண்டனையை எதிர்கொள்கின்ற இந்த நிலைமையில், அதிலிருந்து தப்பிப்பதற்கு ஒரு இரட்சகர் உங்களுக்கு தேவை.

அந்த இரட்சகரின் பெயர் இயேசு கிறிஸ்து!

உயரத்திலிருந்து குதிப்பதால் ஏற்படும் ஆபத்திலிருந்து தப்பிக்க பாராசூட்டை அணிந்து கொள்வது போல, உங்கள் பாவத்தினால் விளைந்த ஆபத்திலிருந்து தப்பிக்க இயேசுவை ஏற்றுக்கொள்ளச் சொல்லி தேவன் அழைக்கிறார். “கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்”[17] என்று அந்த இரட்சகரைக் குறித்து தேவனுடைய வார்த்தைகள் சொல்கின்றன.

இயேசுவை ஏற்றுக்கொள்வதால் என்ன வித்தியாசம் ஏற்படப்போகிறது?

அவரை ஏற்றுக்கொள்வதால் பிரச்சினை எப்படி தீரும்?

எப்படியென்றால்,

நம்முடைய பாவங்களினால் ஆத்திரமடைந்திருந்த தேவன், தன்னுடைய நீதி என்ன சொல்கிறதோ அதைச் செய்வதற்காக, தானே இந்த உலகத்திற்கு மனிதனாக வந்து நமக்கு கிடைக்க வேண்டிய தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டார். மனிதனாக இந்த உலகத்திற்கு வந்த தேவனுடைய பெயர்தான் இயேசு கிறிஸ்து! கிறிஸ்துவுக்குள் தேவன் இருந்து, உலகத்தோடு மீண்டும் சமாதானமானார் என்று வேதம் சொல்கிறது. நம்முடைய குற்றங்களுக்கான விளைவுகளிலிருந்து தப்பிப்பதற்கு நமக்கு உதவக்கூடிய ஒரே ஒரு பாராசூட்டை கிறிஸ்தவ மதம் மட்டும்தான் தருகிறது.

# மீண்டும் விமானத்திற்குள்

இந்த சத்தியத்தை இன்னும் நன்றாக தெளிவுபடுத்திக்கொள்வதற்கு, நாம் மீண்டும் அந்த விமானத்திற்குள் போகலாம். பத்தாயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருக்கிற

விமானத்தின் வாயிலில் நீங்கள் நின்று கொண்டிருக்கிறீர்கள். இப்பொழுது அங்கிருந்து குதிக்க வேண்டும். உங்கள் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டிருக்கிறது. ஏன்? பயத்தின் காரணமாக. கீழே குதித்தால் புவியீர்ப்பு விசையின் இழுப்பினால் நீங்கள் மரணமடைவீர்கள் என்று உங்களுக்கு தெரியும்.

இப்பொழுது ஒருவர் ஒரு கிலோ தங்கத்தை உங்களுக்கு முன் நீட்டுகிறார், நீங்கள் அதை வேண்டாமென்று சொல்கிறீர்கள்.

வேறொருவர் புது மெர்சிடிஸ் பென்ஸ் காரின் சாவியை தருகிறார், அதை வாங்கி கீழே போட்டு விடுகிறீர்கள்.

மற்றும் ஒருவர் ஒரு கோடி ரூபாய் பணத்தை உங்களுக்கு கொடுப்பதற்கு பக்கத்தில் வருகிறார். அவருடைய கையைத் தள்ளிவிட்டு, உங்கள் முன்னாலே இருக்கின்ற பயங்கரத்தை நினைத்து பீதியடைந்திருக்கிறீர்கள்.

அப்பொழுது ஒரு குரல் கேட்கிறது, “இந்த பாராசூட்டை வாங்கிக்கொள்” என்று.

இந்த நான்கு பேரில் யாரை நீங்கள் உங்கள் நண்பராக பார்ப்பீர்கள்? உயரத்திலிருந்து குதிக்க இருக்கிற உங்களுக்கு பாதுகாவலைத் தருகின்ற பாராசூட்டை யார் தருகின்றாரோ அவர்தான் உங்கள் நண்பர்! மீண்டும் நீங்கள் கவனிக்க வேண்டிய உண்மை என்னவென்றால், உங்களுக்கு வந்த பயம்தான் ஒரு சரியான முடிவை உங்களை எடுக்க வைத்திருக்கிறது.

இதே போல, தேவனுடைய கட்டளைகளுக்கு விரோதமாக வாழ்ந்த உங்களை, அந்தக் கட்டளைகள் என்ன செய்யும் என்று நீங்கள் அறிந்துகொள்ளும்போது, உங்களை இரட்சிக்க ஒருவர் இருக்கிறார் என்கிற செய்தி உங்களுக்கு நற்செய்தியாக இருக்கும்! உங்களுடைய கசப்பான, வேதனையான நிலைமையிலிருந்து உங்களை காப்பாற்றுகின்ற ஒரு நல்ல செய்தி அது. தேவன் உங்களை மிகவும் அதிகமாக நேசிக்கிறார். அதனால்தான் அவரே இயேசு என்கிற பெயரில் பாவமில்லாத ஒரு மனிதனாக இந்த உலகத்திற்கு வந்தார். அவர் உங்களுடைய பாவங்களுக்கான தண்டனையான மரணத்தை, மிகவும் கொடுமையான முறையில் சிலுவையில் பெற்றுக் கொண்டார். உங்களுடைய பாவங்களுக்காக, அவருடைய நீதி கொடுக்க வேண்டிய தண்டனையை, அவரே பெற்றுக்கொண்டு நீதியை செய்து முடித்து விட்டார். அதை குறிக்கும் வண்ணமாக, “முடிந்தது” என்கிற வார்த்தையை கடைசியாக சொல்லிவிட்டு சிலுவையில் மரணமடைந்தார்.

கல்வாரி என்கிற இடத்தில் அந்த மரணம் நேர்ந்தபோது, தேவனுடைய கோபம் என்கிற சூறாவளி நின்று அமைதி ஏற்பட்டது. சிலுவையில் சிந்தப்பட்ட அந்த இரத்தம், எரிந்து கொண்டிருந்த அவருடைய ஆத்திரத்தின் மேல் மழையாக பொழிந்து அதை அணைத்துப்போட்டது. பாவத்தினால் நமக்கு ஏற்பட்ட சாபத்தை நீக்குவதற்கு, இயேசு தானே சாபமாக மாறினார்.[18] நாம் சட்டங்களை உடைத்தோம். அதற்கு அபராதமாக, தேவனாகிய அவர் மனிதனாக மாறி அவருடைய இரத்தத்தை செலுத்தினார்.

அதற்குப் பிறகு அவர் மீண்டும் உயிரோடு எழுந்து, மரணத்தை ஜெயித்தார். அவர் உயிரோடு மீண்டும் எழுந்ததன் மூலமாக, பாவங்கள் செய்து எந்த நேரத்திலும் நரகத்திற்கு போகின்ற ஆபத்தில் இருந்த நீங்கள், அதிலிருந்து மீட்டு எடுக்கப்பட்டு புதிய உயிர் பெற்று இப்பொழுது பரலோகம் என்கிற சொர்க்கத்தில் வாழ்வதற்கு வழி பெற்றுள்ளீர்கள். நீங்கள் மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை முழுமையாக நம்பினால், பவுல் என்கிற அப்போஸ்தலர் கீழே சொல்கிற வார்த்தைகளை உங்களாலும் சொல்ல முடியும்:

*“கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.”* [19] (அதாவது, இயேசு கிறிஸ்துவின் மூலமாக “ஜீவன்” என்கின்ற சட்டம், “பாவம் மரணம்” என்கின்ற சட்டத்திலிருந்து என்னை விடுதலையாக்கி விட்டது).

ஆகையால், இனிமேல் நீங்கள் தண்டனையைக் குறித்த பயத்தில் வாழ வேண்டியதில்லை. பாவத்தையும், அதினால் தேவனுக்கு ஏற்பட்டிருக்கிற ஆத்திரத்தையும் எப்படி தீர்ப்பது, அதற்கு என்ன பரிகாரம் செய்வது என்று இனி நீங்கள் தேடி அலைய வேண்டியதில்லை. [20] இயேசு என்கிற இரட்சகர் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு மகா பெரிய பரிசு. அவரைப் பற்றிய செய்தி, பாவம் செய்திருக்கிற அத்தனை உலக ஜனங்களுக்கும் ஒரு நற்செய்தி!

தேவன் உங்களை நீதிமானாக மாற்றுகிறார். அவர் உங்களை சுத்தமாக்கி, இயேசு கிறிஸ்துவில் இருக்கிற நீதியை உங்களுக்கு தருகிறார். உங்களுடைய பாவங்களை கழுவி, உங்கள் இருதயத்தை தூய்மைப் படுத்துகிறார். தன்னுடைய மகிமையைக் கண்டு மரணமடைந்து விடக்கூடாது என்பதற்காக, மோசேயை கன்மலையின் வெடிப்பிலே வைத்து மறைத்துக்கொண்டது போல, அவருடைய நீதியின் கோபத்தினால் நீங்கள் எரிந்து போகாதபடி, இயேசு என்கிற கன்மலைக்கு பின் உங்களை வைத்து மறைத்துக் காத்துக்கொள்வார். [21]

இயேசு கிறிஸ்துவால் மட்டுமே உங்களை பாவத்திலிருந்தும், நரக தண்டனையிலிருந்தும் காப்பாற்ற முடியும்! நீங்கள் யுகம் யுகமாக தவம் இருந்தாலும் கிடைக்காத இரட்சிப்பை அவர் இலவசமாக தருகிறார். [22]

## இன்றே செய்யுங்கள்

இயேசு கிறிஸ்து மூலமாக உங்களுக்கு தரப்படுகின்ற இலவசமான இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு, நீங்கள் செய்த பாவங்களுக்காக மனம் வருந்த வேண்டும். உங்களுடைய பாவ சுபாவத்திலிருந்து மாறி, அவைகளை விட்டு வாழ்வதற்கு, பாராசூட்டை அணிந்து கொள்வது போல இயேசு கிறிஸ்துவை அணிந்து கொள்ள வேண்டும். அவரை மட்டுமே உங்களுடைய பாவ விமோசனமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அதாவது, நன்மைகள் செய்வதன் மூலமாக, செய்த பாவங்களை மறைத்து தப்பித்துக் கொள்ளலாம் என்கிற லஞ்சம் கொடுக்கிற குணத்தை விட்டுவிட்டு, இயேசு கிறிஸ்து உங்களுக்காக சிலுவையில் என்ன செய்தாரோ அதை விசுவாசித்து வாழ வேண்டும். தேவனுடைய கிருபை என்கிற பரந்த வட்டத்திற்குள் நீங்கள் வரவேண்டும். தன்னை நோக்கி கூப்பிடுகிற எல்லோருக்கும் கிருபை தருகின்ற தேவனாக அவர் இருக்கிறார், [23] ஆதலால் தயவுசெய்து அவரை உடனடியாக கூப்பிடுங்கள். ஏற்கனவே செய்த குற்றங்களுக்காக வருந்துகின்ற மனதோடு, தாழ்மையாக அவரிடம் செல்லும்போது அவர் உங்களை ஏற்றுக்கொள்வார்.

அதை இப்பொழுதே செய்யுங்கள், ஏனென்றால் எந்த நேரத்தில் நீங்கள் இந்த உலகத்திலிருந்து போக வேண்டும் என்று உங்களுக்கு தெரியாது. உங்களுடைய பாவங்களை தேவனிடத்தில் அறிக்கை செய்யுங்கள், இயேசுவால் உங்களை இரட்சிக்க முடியும் என்று நம்புங்கள். அப்படி செய்யும்போது மரணத்திலிருந்து எடுக்கப்பட்டு ஜீவனுக்குள் கொண்டு செல்லப்படுவீர்கள். இயேசுவை ஏற்றுக்கொள்ளும்போது, உங்களுக்கு அந்த நித்திய ஜீவனைக்கொடுப்பதாக தேவன் வாக்குக் கொடுத்திருக்கிறார். [24]

தயவுசெய்து, கீழே எழுதியிருப்பதுபோல ஒரு பிரார்த்தனையைச் செய்யுங்கள்:

"அன்புள்ள தேவனே, இன்று நான் என்னுடைய பாவங்களை விட்டுவிடுகிறேன் (என்னென்ன பாவங்கள் என்று சொல்லுங்கள்). இயேசு கிறிஸ்துவை மட்டும் என்னுடைய பாவங்களுக்கு பரிகாரமாக ஏற்றுக்கொள்கிறேன். அவரை என் இரட்சகராக, ஆண்டவராக ஏற்றுக்கொள்கிறேன். என்னை மன்னியுங்கள், என் இருதயத்தை மாற்றுங்கள், உங்களுடைய நித்திய ஜீவனை எனக்கு தந்தருளுங்கள். இயேசுவின் பெயரில் ஜெபிக்கிறேன். ஆமென்."

தேவனை நம்புங்கள். அவர் முழுமையாக நம்பத் தகுந்தவர்.

உங்களுடைய பிரார்த்தனையில் உண்மை இருக்கிறது என்பது, அதைத் தொடர்ந்து நீங்கள் வாழ்கின்ற நல்வாழ்க்கையில் வெளிப்பட வேண்டும். அவருடைய வார்த்தையின் படி வாழும்போது உங்கள் பிரார்த்தனை உண்மை என்பதை நீங்கள் நிரூபிக்கலாம்., ஆகையால் அவருடைய வார்த்தைகளை (பைபிளை) தினமும் வாசித்து, அதன்படி வாழுங்கள். [25]

உங்களையும் உங்கள் குடும்பத்தையும் தேவன் தொடர்ந்து ஆசீர்வதிப்பாராக!

Ray Comfort
--

இதற்குப் பிறகு உங்களுக்கு தேவைப்படுகிற விசுவாச வளர்ச்சிக்கு உதவ, www.livingwaters.com என்கிற இணைதளத்திற்கு சென்று "Save Yourself Some Pain" என்கிற தலைப்பை அழுத்தி அந்த கட்டுரையை வாசியுங்கள். *The Evidence Bible* என்கிற புத்தகம் கிறிஸ்தவ மதத்தைக்குறித்த 100 முக்கியமான கேள்விகளுக்கு பதில் சொல்கிறது. அதிலுள்ள விளக்கங்கள் நீங்கள் வளர்வதற்கு உதவும். [26] The Way of the Master Radio என்கிற வானொலி நிலையமும் உங்களுக்கு தேவைப்படுகின்ற சத்தியங்களை அறிவிக்கின்றது. அந்த வானொலியை இணைதளத்தில் www.WayoftheMasterRadio.com என்கிற விலாசத்தில் கேட்கலாம்.

இந்த புத்தகத்தை வாசித்து விட்டு அப்படியே வைத்துவிட வேண்டாம். இது உங்களுக்கு பயனுள்ளதாக இருந்தால், நீங்கள் விரும்புகிற வேறு யாருக்காவது இதைக்கொடுங்கள். அவர்கள் இந்த உலக வாழ்க்கைக்குப் பிறகு எங்கே போகிறார்கள் என்பது வேறு எல்லாவற்றையும் விட மிக முக்கியமானது. நன்றி.

# குறிப்புகள்

1. ரோமர் 8:2-ஐ வாசியுங்கள்.
2. 1 யோவான் 3:15.
3. மத்தேயு 5:27,28.
4. நீதிமொழிகள் 12:22
5. வெளிப்படுத்தின விசேஷம் 21:8, 1 கொரிந்தியர் 6:9,10.
6. மத்தேயு 12:36.
7. யோவான் 3:36.
8. ரோமர் 2:5
9. எபேசியர் 2:3
10. யாத்திராகமம் 33:18,22.
11. மத்தேயு 5:8.
12. சங்கீதம் 111:10
13. “ஒரு மனிதன் வேறு ஒரு கீழான பிராணியாக மறுபடி பிறப்பது சாத்தியமா” மகரிஷி: “ஆம். அது சாத்தியம். ஜடா பரதா என்கிற வேதக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிற ராஜக்குடும்பத்தின் ஞானி மானாக மறுபடி பிறந்தார்” <www.hinduism.co.za/reincarn.htm>.
14. “உங்களுடைய மனதின் நினைவுகளைக் கடந்து, ஒரு தூய்மையான, காலங்கடந்த, நித்தியமான உணர்வுக்குள்ளே போகும்போது, காலம் நேரம் என்கிற ஒரு மாயை உடைந்து போய், இந்த உலகத்தின் ஜீவமரண சக்கரம், மாற்றம், அநித்தியம், மற்றும் வேதனைகளிலிருந்து விடுதலை பெறுவீர்கள்.” <www.buddhistinformation.com>.
15. “அப்பொழுது, யாருக்கெல்லாம் நற்செயல்களின் எடை அதிகமாக இருக்கிறதோ, அவர்கள் வெற்றி அடைவார்கள். ஆனால் அந்த எடை குறைவாக இருப்பவர்களோ, தங்கள் ஆத்துமாவை இழந்து, நரகத்தில் வாழ்வார்கள்.” (Surah 23:102,103).
16. நீதிமொழிகள் 15:8.
17. ரோமர் 13:14.
18. கலாத்தியர் 3:13.
19. ரோமர் 8:2.
20. “யெகோவாவின் சாட்சி” மற்றும் “மார்மோனியர்கள்” என்கிற சமயங்களைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். அவர்கள் “கிறிஸ்தவம்” என்கிற போர்வையைப் போர்த்திக் கொண்டு, நற்செயல்களால் தங்கள் பாவங்களை மறைக்க முயற்சி செய்கிறவர்கள்.
21. 1 கொரிந்தியர் 10:4.
22. “கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல.” (எபேசியர் 2:8,9).
23. அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது. “யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை. எல்லாருக்குங் கர்த்தரானவர், தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார். ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்.” (ரோமர் 10:11-13).
24. “என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு. அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.” (யோவான் 5:24).
25. “என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான். நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்.” (யோவான் 14:21).
26. *The Evidence Bible* (Bridge-Logos Publishers), புத்தகக் கடைகளிலும், www.livingwaters.com இணைதளத்திலும் கிடைக்கும்.
27. மேலும் அதிக புத்தகங்கள் www.livingwaters.com இணைதளத்தில் மலிவு விலையில் கிடைக்கும்.